# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 8 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் 30.05.2020 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவரையும் வணங்கி எனது உரையை தொடங்குகின்றேன். என்னுரை ஏற்றிட்ட தலைப்பு

## காட்டுத் தீ



நெருப்பின்றி புகையாது, தீப்பொறி இன்றி எரியாது. காட்டுக்குள் தீ எழுந்தால் அது தொடர்ந்து, பரந்து, விரைந்து, எரியும். அனைத்தையும் கருக்கும். காட்டினை அழிக்கும். அனல், தணல், தூசு, துணிக்கை,புகை என்பவற்றை நாட்டுக்குள்ளும் அனுப்பும். இது பெருங்காடுள்ள நாடெங்கும் நடக்கின்ற துன்பம். வளமான உலகை அழிக்கின்ற பாகம். ஆதி முதல் உலகை எரிக்கின்ற சோகம். காடென்றால் அது பறவைகளின் கூடு, விலங்குகளின் வீடு, இயற்கையின் பேறு, வளங்களின் சுரங்கம். காற்றைத் தடுக்கும், காலநிலை பேணும், மழை பெய்ய உதவும், வளியின் தூசு துணிக்கையை வடிகட்டும், விஞ்ஞானம் வளர்ந்தும் காட்டுத்தீ கட்டுக்குள் வரவில்லை. ஏன் இந்த நிலை?

நாம் வாழும் கோள் புவி.

**நிலம் நீர் தீ வளி விசும்பு ஐந்தும்**

**கலந்த மயக்கம் இந்த உலகம்.**

என்று செப்புகின்றது தொல்காப்பியம். மனிதனின் திட்டமற்ற வளச்சுரண்டல் கலவையை குழப்புகிறது. இக்கலவை குழம்பினால் இயற்கை மாறும். புவிச் சமநிலை குழம்பும். வெப்பநிலை ஏறும். மழைவீழ்ச்சி குறையும். காடுகள் எரியும். விலங்குகள் அழியும். சுவாச நோய்கள் தோன்றும். விழிப்புடன் இருப்போம். வளச்சுரண்டலை குறைப்போம். இயற்கையை காப்போம். காட்டுத்தீ வராது தடுப்போம். புவி நிலைத்திட உழைப்போம்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. செல்வராஜி இரங்கநாதன்.